தமிழ்நாட்டிற்கு அவமானத்தைத் தேடித் தந்துள்ளார் விஜய்! விவசாயிகளின் துரோகி விஜய்!

முதல்வர் விஜயின் முடிவால் தமிழ்நாட்டிற்குப் பெரும் பின்னடைவு!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் பதிலடி!

சென்னை, ஆக.4 - காவிரிப் பிரச்சினையை திசை திருப்பும் வகையில், தி.மு.க. மீது அவதூறு பரப்ப முயன்ற அமைச்சர் நிர்மல் குமாருக்கு கழக வழக்கறிஞர் அணி இணைச்செயலாளர் இ.பரந்தாமன் பதிலடி கொடுத்துள்ளார்.

அவரது பேட்டி வருமாறு:–

நாக்கில் எலும்பில்லை என்பதற்காக வாய்க்கு வந்ததை எல்லாம் பேசி கொண்டுள்ளார் அதிகப்பிரசங்கி அமைச்சர் நிர்மல் குமார். உசிலம்பட்டி கிராமத்தில் நிர்மல் குமார் ஜட்டி போட்டுக் கொள்ளாத காலத்திலேயே காவிரி நதி நீர் பிரச்சினை என்றால் என்ன.. அதற்கு ஒரு தீர்ப்பாயத்தை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். நிர்மல்குமார் எல்லாம் முத்தமிழறிஞர் கலைஞர் பற்றி பேச தகுதி துளியுமில்லை.

தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் முதல்வர் எடுத்த நடவடிக்கைக்கு எதிராக உள்ளனர் என்கிறார் மேலும் ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு கருத்து தெரிவிக்கும் போது அனைத்து கட்சி கூட்டம் எப்படி கூட்டமுடியும் என கேட்கிறார் விஞ்ஞானி நிர்மல் குமார். ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நிலைப்பாடு இருப்பது தான் அரசியல் கட்சி அவை அனைத்தையும் ஒருங்கிணைத்து அழைத்து செல்வது முதல்வருடைய வேலை. இதற்கு முன்பிருந்த தமிழ்நாட்டு முதலமைச்சர்கள் எல்லோருமே அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி உள்ளனர்.

அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டி கருத்துக்களை கேட்டு ஒரு முடிவெடுத்து ஒன்றிய அரசிற்கு அனுப்புவதோ அல்லது அவர்களை சென்று சந்திப்பதோ வழக்கமாக வைத்துக் கொண்டிருந்தார்கள். நான் கேட்கிறேன் நேற்றைக்கு சில ஊடகங்களே செய்தி வந்தது. காவிரி நதி பிரச்சனை குறித்தும் மேகதாது விவகாரம் குறித்தும் முதலமைச்சர் கோட்டையிலே அதிகாரிகளுடன் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார் என்று ஒரு தகவல் வந்தது.

செய்தி நிறுவனங்கள் மூலமாக தொலைக்காட்சிகளிலே உங்களை யாராவது கூப்பிட்டு என்ன முடிவெடுத்தோம் என்ன பேசினோம் என்று இதுவரை முதலமைச்சர் சொல்லி இருக்கிறாரா? அல்லது தலைமை செயலாளர் சொல்லி இருக்கிறாரா? அல்லது தமிழ்நாட்டினுடைய நீர்வளத்துறை செயலாளர் பேசி இருக்கிறாரா? அல்லது தமிழ்நாட்டினுள் நீர்வளத்துறை அமைச்சர் நேற்றைக்கு முதலமைச்சர் இத்தகை ஆலோசனையை செய்திருக்கிறார் என்பதை சொல்லுவதற்கு இவர்களுக்கு வெளிப்படைத் தன்மை இருக்கிறதா? எதுவுமே இல்லை.

தூங்குமூஞ்சி அரசாங்கம்!

19–ஆம் தேதி ஜூன் மாசம் சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட தீர்மானம். அந்த தீர்மானத்திற்கு திருத்தங்களை கொடுத்தது நம்முடைய எதிர்கட்சி தலைவர் மாண்புமிகு உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அந்த திருத்தத்தை யும் ஏற்றுக் கொண்ட இந்த அரசு 19.6.2026 அன்று சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு இன்று வரை காவிரி நதிநீர் பிரச்சனை குறித்தும் மேகதாது விவகாரம் குறித்தும் இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை இந்த அரசு வெளிப்படையாக விளக்க வேண்டும். தீர்மானத்தை போட்டு விட்டு தூங்கிக் கொண்டிருக்கின்ற முதலமைச்சர் தூங்கு மூஞ்சி தவெக அரசாங்கம் இன்றைக்கு திராவிட முன்னேற்ற கழகத்தை பார்த்து டிகே சிவகுமாரை கட்டுப்படுத்துகிறார் என்று சொல்கிறார்கள். காங்கிரஸ் சொல்லுகிற பேச்சையே டிகே சிவகுமார் கேட்கவில்லை என்று சொல்கிறார்.

நான் வெளிப்படையாக நிர்மல் குமாருக்கு சவால் விடுகிறேன். காங்கிரஸ் கட்சி என்ன பேசியது என்பதை பொதுவெளியில் சொல்ல வேண்டும். ராகுல் காந்தி நேற்றைக்கு தமிழ்நாட்டுக்கு வந்தாரே அவர் என்ன கருத்தை டி.கே சிவகுமாருக்கு சொல்லி சிவகுமார் கேட்கவில்லை என்பதை வெளிப்படையாக சொல்ல வேண்டும். காங்கிரஸ் எதை அறிவித்து செய்யவில்லை என்பதை இங்கே விளக்க கடமைப்பட்டிருக்கிறார் முதல்வர் விஜய். அதுமட்டுமல்ல டி.கே. சிவக்குமார் அவர்கள் இன்றைக்கு அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டுகிறார். ஆனால் எங்களுடைய எதிர்கட்சி தலைவர் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்டுங்கள் என்று சொன்னதை நீங்கள் செய்யவில்லை.

சட்டமன்றத்தில் தீர்மானம் இயற்றிய பிறகு அவற்றை கடிதம் மூலமாக ஒன்றிய அரசுக்கு அனுப்புவது பிரயோஜனம் இல்ல. எல்லா கட்சி தலைவர்களும் அழைத்துக்கொண்டு டெல்லிக்கு வாங்க போவோம். பிரதமந்திரியை சந்திப்போம். நீர்வளத்துறை அமைச்சரை சந்திப்போம். இந்த பிரச்சனையில் தமிழ்நாடு ஒருமித்த கருத்தோடு ஒன்றாக இணைந்திருக்கிறது என்பதை அவர்களுக்கு புரியவைப்போம். இந்த அழுத்தத்தை தருவோம் என்று சொன்ன கருத்திற்கு இதுவரை பதில் இல்லை.

ஒரு எதிர்கட்சி தலைவர் சட்டமன்றத்தில் பேசிய பேச்சுக்கு ஒன்று சட்டமன்றத்தில் பதில் சொல்லி இருக்க வேண்டிய முதலமைச்சர் இன்றுவரை சொல்லவில்லை. அல்லது இவர் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதை இதுவரை சொல்லவில்லை. இன்றைக்கு அமைச்சர் நிர்மல் குமார் சொல்லுகிறார் இந்த லேகியம் விக்கறவங்க வந்து ரோட்ல வந்து நின்னாங்கன்னா இப்படி கையை காட்டி ஒரு மூணு வழி இருக்குதுங்க இது காலையில ஒரு வேலை சாப்பிடணும் மத்தியானம் ஒரு வேலை சாப்பிடணும் இரவு ஒரு வேலை சாப்பிடணும்ன்ற மாதிரி ஒரு மூணு சொல்யூஷன் இருக்குங்க இது இது வந்து கோர்ட்ல போய் போடணுங்க இது வந்து சுமுக தீர்வு, இது வந்து இப்படி பண்ணனுங்க இப்படின்னு ஒரு ஒரு ஃபிலிம் காட்டிட்டுதான் போறாங்களே தவிர இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது என்பதை இதுவரை நாட்டு மக்களுக்கு சொல்லவில்லை.

ஆனால் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய தலைவர் எச்சரித்தார். தீர்க்கதரி சித்தனமாக அனுபவத்தை கொண்டு நீங்கள் பேச்சு வார்த்தைக்காக கர்நாடகா செல்வது என்று தவறான முடிவு உங்களுக்கு அப்படி யாராவது ஆலோசனை சொல்லி இருந்தால் அந்த முடிவை மாற்றி கொள்ளுங்கள் என்று சொன்னார். அது சொன்னது மட்டுமல்ல இந்த பிரச்சனையில் முதலமைச்சர் தனிமைப்படுத்தப் பட்டிருக்கிறார் என்று சொன்னதை மூக்கு மேல கோவம் வந்திருக்கிற திரு.நிர்மல் குமார் அவர்களே இன்றைக்கு

விஜய் தனிமைப்படுத்தப்பட்டிருக்கிறார்.

கர்நாடகாவில் இருக்கக்கூடிய எல்லா அரசியல் கட்சி தலைவரும் ஒன்றாக நிற்கி றார்கள். ஆனால் இன்றைக்கு விஜய்க்கு என்ன வெட்கம்? என்ன பெரிய கௌரவம் ஏன் எல்லா கட்சி தலைவரும் கூப்பிட மாட்டேங்கறாரு. நாட்டினுடைய முத லமைச்சர் நாட்டு மக்களுடைய பிரதி நிதியாகத்தானே உட்காந்திரு க்கீங்க உங்களுக்கு என்ன ஈகோ இந்த ஈகோவை இந்த தாந்தோணி தனத்தை உங்களுடைய சினிமாவில வச்சுக்கங்க என்னைக்கு நீங்க முதலமைச்சரா தமிழ்நாட்டுக்கு பொறுப்பேத்தீங்களோ நாட்டு மக்களுடைய அக்கறை தான் நலன்தான் உங்களுக்கு முக்கியமே தவிர ஈகோ முக்கிய மல்ல இன்றைக்கு தொலைக்காட்சிகளும் சரி அல்லது திரைப்ப டங்கள்ல் வரக்கூடிய வசனங்களை போலதான உங்களுடைய அமைச்சர்கள் பேசிட்டு போறாங்களே தவிர இந்த மேகதாது பிரச்சனையில என்ன நடவடிக்கை எடுத்திருக்காங்க. ட்ரிபூனல உருவாக்கணும்னு சொல்லி கேட்டிருக்கிறோம் உங்களுடைய நிலைப்பாடு என்ன

. நான் இன்றைக்கு வெளிப்படையாக சேலஞ்ச் பண்றேன் இந்த பேட்டி கண்ட 24 மணி நேரத்திற்குள் சீப் மினிஸ்டர் ஆப் தமிழ்நாடு ஆர் த வாட்டர் ரிசோர்சஸ் மினிஸ்டர் புசி ஆனந்த் இல்ல டெய்லி உளறி நிற்கிற நிர்மல் குமார். நீங்க மூணு பேர்ல யாராவது ஒருத்தர் திமுக வைக்கக்கூடிய கேள்விக்கு கட்டாயம் மக்கள் மத்தியில் வந்து பதில் சொல்லணும்.

மேகதாது அணை கட்டக்கூடிய விஷயத்தில் ஒரு ட்ரிபூனலை அமைக்கப்பட வேண்டுமா வேண்டாமா? ட்ரிபூனலை அமைக்க வேண்டும் என்றால் அதற்கு இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? நீதிமன்றத்தை நாடுவதற்கான என்ன முயற்சிகள் எடுத்திருக்கிறீர்கள் ? 19.6.2026 அன்று தீர்மானம் போட்டுவிட்டு தூங்கி கொண்டிருக்கின்ற முதலமைச்சர் இன்றுவரை உச்சநீதிமன்றத்தில் ஏன் மனு தாக்கல் செய்யவில்லை.? ஒரு மாநிலத்திற்கும் இன்னொரு மாநிலத்திற்கும் நதிநீர் பிரச்சனை ஏற்படுமேயானால் அணை கட்டுவதிலே பிரச்சனை ஏற்படுமேயானால் இன்டரஸ்டேட் வாட்டர் டிஸ்பயூட் ஆக்ட் 1956–ன் படி ஒரு ட்ரிபூனலை அமைக்கலாம் என்பதை கேட்கலாம் என்கின்ற உரிமை அந்தந்த மாநிலங்களுக்கு இருக்கிறது .

ஏன் திமுக ட்ரிபூனல கேட்கிறது என்றால் உச்சநீதிமன்ற நீதிபதியின் தலைமையில் இரண்டு உயர்நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட அமர்வு இந்த அமர்வு வந்து எந்த அதிகாரிகளுடைய கட்டுப்பாட்டில் இருக்காது எந்த அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்காது ஒன்றிய அமைச்சகத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்காது ஒரு நீதிமன்ற த்தினுடைய நீதிபதிகள் மூன்று பேர் அமர்ந்து இதை விசாரிப்பதின் மூலமாக ஒரு தீர்வு கிடைக்கும்.

இதையெல்லாம் புரிந்த அனுபவமிக்க திராவிட முன்னேற்ற கழகம் இதை கையில் எடுத்து ஏற்கனவே முதல மைச்சரா இருக்கும்போது நம்முடைய தலைவர் கழகத்தினுடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பிப்ரவரி மாசமே லெட்டர் எழுதினார். அதற்கு பிறகு நீங்க ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம் உங்களுக்கு எல்லாத்தையும் நாங்க செஞ்சு வச்சிருக்கிறோமே ஸ்டிக்கர் ஒட்டுறது உங்களுக்கு பெரிய கஷ்டமா என்ன ? நாங்க ஏற்கனவே லெட்டர் எழுதிட்டோம்.

இந்த ஸ்டெப் தான் எடுக்க போகுது தமிழ்நாடு கவர்மெண்ட் ஒரு கோட் ஆஃப் காண்டாக்ட் காட்டி விட்டுட்டோம். ஏன் நீங்க வந்து அட்வகேட் எங்கேஜ் பண்ணி சுப்ரீம் கோர்ட்ல இதுவரைக்கும் மனு போடல. அப்போ நாடகம் ஆடுகிறார் முதல மைச்சர். நடிக்கிறார் முதலமைச்சர். இதன் மூலமாக அரசியல் ஆதாயம் தேடுகிறார் முதலமைச்சர்.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய பிரச்சனைகளை தீர்க்கின்ற எண்ணம் முதலமைச்சருக்கு கிடையாது. பெஞ்ச் தேய்க்கிற முதலமைச்சராகத்தான் இருக்கிறாரே தவிர பெஞ்ச்மார்க்கோடு ஆட்சியை செய்ய வேண்டும் என்ற எண்ணம் முதலமைச்ச ருக்கு துளியுமில்லை.

கலைஞரைப் பற்றி அவதூறா பேசுகிற எவன் ஒருவனாக இருந்தாலும் சரி திராவிட முன்னேற்ற கழகம் சும்மா விடாது. இவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும். மிஸ்டர் நிர்மல் குமார் யாருகிட்ட வந்து நீ பேசுற நாகரிகம் பற்றி. வாய்க்கு வந்த மாதிரி எல்லாம் பேசக்கூடாது. தமிழ்நாட்டினுடைய சீனியர் தலைவர் இந்தியாவே பார்த்து உயர்ந்து நிற்கிற தலைவர் தமிழ்நாட்டினுடைய உரிமைகளை மீட்டெடுத்து கொடுத்த தலைவர். 205 TMC ங்கிற வார்த்தை உனக்கு காதுல கேட்டிருக்கும்ல நீ சின்ன பிள்ளையா இருந்த போது டிவியை திறந்தா செய்தித்தாளர்களை பார்த்தா 205 டிஎம்சி காவிரி தண்ணீர் தமிழ்நாட்டுக்கு விட வேண்டும் என்று அதை பெற்றுத்தந்தவர் கலைஞர். தமிழ்நாட்டில் இருந்திருந்தா தெரிந்திருக்கும் காக்கி ட்ரவுசர் போட்டுகிட்டு ஆர்எஸ்எஸ் கிட்ட இருந்தீங்கனா எப்படி தெரியும்.

நாங்க ஏற்கனவே சொன்ன மாதிரிதான் பல வண்ண வேஸ்டிய நீ மாட்டினா கூட நீ அடியில மாட்டிட்டு இருக்கறது காக்கி ட்ரவுசர். அந்த புத்தி உன்ன விட்டு போகாது. அதனால இந்த ரயில்வே ஸ்டேஷன்ல நின்னு பேட்டி கொடுக்கறது இந்த விமான நிலையத்தில நின்னு பேட்டி கொடுக்கறது போற வழியில நின்னு பேட்டி கொடுன்னா கொடு வேணான்னு சொல்ல ஒழுங்கா கொடு. தரவுகளோட கொடு. அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக இருந்து முறையாக மக்களுக்கு பதிலை கொடு.

அவதூறு வழக்குகள்!

ஜூன் 12 ஆம் தேதி காவிரி நீர் திறந்திருக்கணும். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தோம்னு சொல்றதுக்கு துப்புல்ல. இன்னைக்கு குறுவை போயிடுச்சு. இந்த தண்ணி இப்ப வருதுன்னா மழை பெஞ்சதுனால வருது. உபரிநீரை எல்லாம் கொடு க்குறாங்க அவங்க. இதுக்கு மேல கர்நாடகா பூட்டி வைக்க முடியாது இல்லன்னா அணை உடைஞ்சிரும். வடிகாலாதான் பயன்படுத்துகிறது என எங்களுடைய தலைவர் சொல்லி இருக்கிறாரே இதையெல்லாம் கொஞ்சம் கூட இந்த அறிவே இல்லாம இந்த அரசு வாய்க்கு வந்தபடி பேசுறது. இவங்க பேசுற பேச்சுக்களுக்கு எல்லாம் இனி அவதூறு வழக்குகள் பாயும்.

இப்ப கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி நான் இங்க வரும் போது ஒரு அறிவு ஜீவி மாணிக் தாக்கூர் ஒரு பேட்டியை கொடுத்துக்கிட்டு இருந்தார். அவர் என்ன சொன்னாருன்னா தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அரசியல் கட்சிகள் எல்லாம் ஒத்த கருத்தோட இல்ல. இவங்களுக்கெல்லாம் அரசியல் பண்றதுதான் இருக்கே தவிர தண்ணி வாங்குற அக்கறை இல்லைன்னு சொல்றாரு. அக்கறையை பத்தி யார் பேசுறது? நேத்து ஒருத்தர் வந்து டெல்லியில இருந்து இங்க வந்துட்டு எட்டப்பன் குட்டப்பன் என சொன்னாரே அவர் காவிரி நதிநீர் பிரச்சனை பற்றி பேசினாரா.? அதற்கு தைரியம் இருந்ததா? அந்த கருத்தை சொல்றதுக்கு ராகுல் காந்திக்கு எழுதி கொடுத்தது உங்களுக்கு அந்த துணிச்சல் இருந்ததா? தமிழ்நாட்டினுடைய காவிரி நதி பிரச்சனை பத்தி பேசாம போற ஒரு ஆளு அப்படிப்பட்ட தலைவர்களல்லாம் வைத்திருக்கிற மாணிக் தாக்கூர்ல்லாம் திராவிட முன்னேற்ற கழகத்தை பற்றியோ தமிழ்நாட்டில இருக்கக்கூடிய அரசியல் கட்சி தலைவர்களை பற்றியோ பேசுவதற்கு கொஞ்சமும் தகுதி கிடையாது.

உங்களுடைய ஆட்சிதானே அங்கே நடக்கிறது. காங்கிரஸ் சொல்றதே கேட்கல அப்படின்னு சொல்றாங்கன்னா காங்கிரஸ் தலைவரா இருக்க மாணிக் தாக்கூர் நீங்க என்ன சொல்லி என்ன கேட்கல விஜயனுடைய மவுத் பீசா இருக்க மாணிக் தாக்கூர் பத்திரிகை சந்திச்சு பேசுங்க இதையெல்லாம் செய்யாம வாய்க்கு வந்ததை பேச வேண்டாம். திராவிட முன்னேற்ற கழகம் மூன்று கேள்வியை முன் வைக்கிறது. 24 மணிநேரத்தில் பதில் அளிக்க வேண்டும். சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு இன்று வரை மேகதாது அணை கட்டுவதை தடுப்பதற்காக ட்ரிபூனல் அமைப்பதற்கு என்ன நடவடிக்கை நீங்கள் எடுத்தீர்கள் ? நேற்றைக்கு முதலமைச்சர் கோட்டையிலே அமர்ந்து கொண்டு அதிகாரிகளோடு காவிரி பிரச்சனையை குறித்து விவாதித்ததாக சொன்னார்கள் அதனுடைய விளைவு என்ன முடிவு என்ன? வெளிப்படுத்த வேண்டும். நீங்கள் கர்நாடகாவுக்கு செல்லும் பயணம் என்பது உங்களிடமிருந்து சென்றது உங்களுடைய ரெக்வஸ்ட் லெட்டரை பொதுவழியில் நீங்கள் போட வேண்டும்.

மோசமான அமைச்சரவை!

விவசாயத்துறை அமைச்சர் சொல்லுகிறார். பள்ளி கல்வித் துறை அமைச்சர் முதலமைச்சர் இருந்து வரக்கூடிய செய்திதான் முதலமைச்சருடைய கான்கிரிட் பிளான் என்கிறார். அதே மாதிரி நிர்மல் குமார் சிஎம் ஆபீஸ்ல இருந்து சொல்ற டூர் ப்ரோக்ராம் தான் சிஎம் உடைய கன்ஃபர்மேஷன் ப்ரோக்ராம் சொல்றாங்க. ஒரு முதலமைச்சர் கர்நாடகாவுக்கு செல்கிறாரா இல்லையா என்பதை கூட வெளிப்படைத்தன்மையோடு ஒரு அறிக்கை விடுவதற்கு வக்கற்ற அரசாங்கம் இன்றைக்கு வாய்க்கு வந்ததை பேசிக்கொண்டு இருக்கிறது. எனவே இந்த மூன்றையும் விளக்க வேண்டிய பொறுப்பு முதலமைச்சர் மற்றும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை நாங்கள் திட்டவட்டமாக சொல்லிக் கொள்கிறோம். இத்தோட நிர்மல் குமார் போன்றவர்கள் நாகரிகமற்ற முறையில் பேசுவதை நிறுத்த வேண்டும். நீங்க வாய்க்கு வந்தபடி பேசுனீங்கன்னா எப்படி உங்க வாயை மூட வைக்கணும்ன்றது திமுகவிற்கு தெரியும்.

காவிரி பிரச்சனை பற்றி எதுவுமே தெரியாத அமைச்சர்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான அமைச்சர்கள எல்லாம் இருப்பது தமிழ்நாட்டுக்கான அவமானம். இந்த மாதிரியான ஒரு மோசமான அரசாங்கத்தை தமிழ்நாடு பார்க்கல. இந்த மாதிரி மோசமான அமைச்சரவை தமிழ்நாடு பார்க்கல. கொஞ்சம் கூட ஒரு அக்கவுண்டபிலிட்டி இல்லாம கொஞ்சம் கூட இவங்களுக்கு ஒரு பொறுப்பு தன்மை இல்லாம ஆட்சி செஞ்சுட்டு இருக்காங்க.

நாங்க கேட்ட இந்த மூணு கேள்விக்கு 24 மணி நேரத்தில உங்ககிட்ட பதில் இல்லைன்னா நீங்கள் தமிழ்நாட்டுக்கு செய்யக்கூடிய துரோகிகள் என்றுதான் காவிரி டெல்டா விவசாயிகள் பார்ப்பார்கள் என்பதை இதன் மூலமாக நிர்மல் குமாருக்கு நான் எச்சரிக்கிறேன். சட்டப் போராட்டம் நடத்துவதற்கு தாமதம் ஏற்படும் வகையில் முதலமைச்சர் கர்நாடகா செல்கிறார் என்ற முடிவு தமிழ்நாட்டுக்கு வராது ஒரு பெரும் பின்னடைவா ஏற்பட்டிருக்கு இது கர்நாடகாவிற்கு தான் அட்வான்டேஜ். ஒன் அண்ட் ஒன்லி வே உச்சநீதிமன்றத்திற்கு சென்று இன்டரஸ்டேட் வாட்டர் டிஸ்பயூட் ஆக்ட் படி மேகதாது அணையை கட்டக் கூடாது என்பதற்கு ட்ரிபூனலை அமைப்பதுதான் ஒரே வழி. இந்த வழியை அவங்க மேற்கொள்ளாத வகையில் தமிழ்நாட்டுக்கு பின்னடைவு தான். இன்னும் சொல்லப்போனால் தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்தி இருக்கிறார் திரு.விஜய் அவர்கள்.

ஒரு முதலமைச்சர் இன்னொரு மாநிலத்துக்கு வருவதை வேண்டாம்னு சொல்லக்கூடிய அவமானத்தை முதல் முறையா நடக்கிறது. தமிழ்நாட்டின் மீது இந்த அவமானத்தை கொண்டு வந்து சேர்த்த பெருமை பழி விஜயை சாரும். தமிழ்நாட்டுக்கு பெரிய அவமானத்தை விஜய் தேடி கொடுத்துள்ளார். தமிழ்நாட்டை அவமானப்படுத்தி விட்டார் விஜய் அவர்கள் காவேரி டெல்டா விவசாயிகளை அவமானத்துப்படுத்தி விட்டார் . இன்னும் சொல்லப்போனால் விவசாயிகளின் துரோகி விஜய், விவசாயிகளின் துரோக ஆட்சி இந்த தவெக ஆட்சி.

இவ்வாறு கழக வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் இ.பரந்தாமன் குறிப்பிட்டார்.

கழகத் தலைவரின் முன்னாள் உதவியாளர்

ஆதிசேசன் தாயார் சொர்ணம்மாள் மறைவு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஆக.4 -

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராக நான் பணியாற்றியபோது, எனது உதவியாளராகப் பணியாற்றிய ஆதிசேசன் அவர்களது தாயார் திருமதி. சொர்ணம்மாள் அவர்கள் மறைந்த செய்தியறிந்து பெரிதும் வருத்தமுற்றேன்.

பெற்ற அன்னையை இழந்து வாடும் ஆதிசேசன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நதியும் விதியும்!

ஒரு நதி உற்பத்தி ஆகும்
பிரதேசத்தை விட
அது ஓடிச்சென்று
பயணித்து நிறைவுறும்
பகுதிக்கே பயன்பாட்டு
உரிமை அதிகம்
என்கிறது சர்வதேச
நதிநீர்ச் சட்டங்கள்..
ஆனால் இதற்கு மாறாக
கனமழை காலத்திற்கு
வடிகால் பிரதேசமாக மட்டுமே
தமிழ்நாட்டைக் கருதுவோம்
என்கிறது கர்நாடகம்...

மத்தியில் ஆட்சி செய்த
அன்றைய காங்கிரஸ்
ஆனாலும்
இன்று ஆட்சி நடத்துகிற
பா.ஜ.க. ஆனாலும்
தங்கள் அரசியல்
ஆதாயத்துக்காக
கர்நாடகத்தின் பக்கமே
தலையாட்டுவதை அவை
வாடிக்கையாகக்
கொண்டிருக்கின்றன..
மிகக் கடுமையான
சட்டப் போராட்டங்களால்
மட்டுமே
காவேரி உரிமையை
நிலைநாட்டின
திராவிட இயக்கங்கள்.
இந்த எந்த வரலாறும்
தெரியாத புரியாத
“அப்ரண்டிஸ்” த.வெ.க.
ஆட்சியை பயன்படுத்தி
மேகதாது விவகாரத்தை
தன்வசப்படுத்தப்
பார்க்கிறது
கர்நாடக காங்கிரஸ்
சர்க்கார்...

மருது அழகுராஜ்
கழக செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர்

காதர் மொகிதீன் புதல்வர் கே.எம்.கே.கலிலூர் ரகுமான் மறைவு!

முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு – அன்பில் மகேஸ் பொய்யாமொழி – கழகத்தினர் அஞ்சலி!

திருச்சி, ஆக 4 -

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொகிதீன் மூத்த மகன் கே.எம்.கே. கலிலூர் ரகுமான் (59) திருச்சி அப்பல்லோ மருத்துவமனையில் ஆகஸ்ட் 1 இரவு உடல் நலக் குறைவு காரணமாக காலமானார்.

இவருக்கு மனைவி ரசிதா பானு, மகன் முகமது, மகள் சபா ஆகியோர் உள்ளனர்.

செய்தி அறிந்ததும் திருச்சி காஜா நகர் காயுதே மில்லத் தெருவில் உள்ள காதர் மொகிதீன் இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த கலிலூர் ரகுமான் உடலுக்கு தி.மு.க. கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அவர்கள் நேரில் சென்று, அஞ்சலி செலுத்தி பேராசிரியர் காதர் மொய்தீன் அவர்களுக்கும், குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறினார் அன்பில் மகேஷ் பொய்யாமொழி மேயர் அன்பழகன் பொருளாளர் துரைராஜ், குடமுருட்டி சேகர், உட்பட கழக நிர்வாகிகள் பலர் உடன் சென்றனர்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் துயர் தாளது வேதனையில் வாடும் காதர் மொகிதீன் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தார்.

பொன்னி - சாளரம் பதிப்பக நூல் வெளியீட்டாளர்

வைகறைவாணன் மறைவு!

சூலூர் பாவேந்தர் பேரவை நிர்வாகிகள் அஞ்சலி!

சென்னை, ஆக. 4 -

பொன்னி - சாரளம் பதிப்பக நூல் வெளியீட்டாளர் தோழர் வைகறை வாணன் 1.08.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

திருவையாறு அரசர் கல்லூரியில் பயின்று 1971இல் புலவர் பட்டம் பெற்றவர் வைகறைவாணன் குடந்தை அருகே உள்ள பாபநாசம் இராமநல்லூரில் பிறந்ததால் ‘இராமநல்லூர்இளங்கண்ணன்’ என்ற பெயரில் எழுதத் தொடங்கியவர். இயற்பெயர் பா. செயபாலன்.

தென்மொழி இதழ்த் தொடர்பால் தனித்தமிழியக்கச் செயல்மறவராகப் ‘பா.செந்தமிழ்வேங்கை’ எனும் பெயரில் செயல்பட்டு வந்தவர்.



கல்லூரியில் பயின்ற காலத்தில் எப்போதும் கருஞ்சட்டையுடன்தான் வகுப்பிற்கு வருவார். அதனால் ‘கருஞ்சட் டைப்புலவன் ‘ என்ற பெயரிலும் எழுதிவந்தார்.

சென்னை வாழ்வை 1978இல் தொடங்கியபின், இதழாசிரியராகவும் பதிப்பாளராகவும் அடையாளம் பெற்றார்.

பொன்னி , சாளரம் இவர் நடத்திய பதிப்பகங்கள்.

பாலம், நூல்நயம், கார்க்கி இவர் நடத்திய இதழ்கள்.

1.8.2026 இரவு 8.00 மணிக்கு உடலால் விடைபெற்றாலும் , நூல்கள் மலர்கள் எனத் தோழர் வைகறை வெளியிட்ட அறிவுக்கருவூலங்கள் என்றும் அவரை நம்மோடு வாழவைத்துக்கொண்டிருக்கும்.

இறுதி ஊர்வலம் 2.8.2026 மாலை 3.00மணிக்கு 2/1758. சாரதி நகர் என்ஃபீல்ட் நிழற்சாலை (அவென்யூ), மடிப்பாக்கம் சென்னை எனும் முகவரியில் இருந்து புறப்பட்டு கீழ்க்கட்டளை மின்மயானத்தில இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து சூலூர் பாவேந்தர் பேரவை நிர்வாகிகள் அஞ்சலி செலுத்தினர்.